**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 40/2024**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாண்டிதுரை** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. ரத்தினம்** | **Calling** | : | |
| **Village** | : | **பழனிபட்டி, நத்தம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **40** |
| | | | **Dated** | : | **03.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**Accused present. Both side counsels present.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), திரு. **பாண்டிதுரை** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கட்டிட வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் என் மைத்துனர். ஆஜர் எதிரியின் அக்காவை நான் திருமணம் செய்து கொண்டு இருக்கிறேன். இறந்துபோன சரிதா என் மகள் ஆவார். காயம் பட்ட நந்தினி எனது உறவினர் ஆவார். சுமார் 6 அல்லது 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் கோவைக்கு வேலைக்கு சென்று இருந்தேன். அப்பொழுது மதியம் சுமார் 12.00 மணி அளவில் எங்கள் ஊரில் விசேசம் நடந்து கொண்டு இருந்து, அவர்கள் தகவல் கொடுத்தார்கள். ஆஜர் எதிரி இறந்துபோன என் மகள் சரிதா மற்றும் நந்தினி ஆகியோரை தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் ஓட்டிச் சென்று அடைக்கனூர் என்ற இடத்தில் பஸ் எதிராக வரும்போது அதற்காக சைடு வாங்கிய போது நிலை தடுமாறி இரு சக்கர

வாகனத்தோடு மேற்படி மூவரும் பள்ளத்தில் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும், அதில் ஆஜர் எதிரி உட்பட மூவருக்கும் காயமாகி இருந்ததாகவும், அதனால் அவர்களை நத்தம் அரசு மருத்தவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்து இருப்பதாகவும் சொன்னார்கள். சம்பவ இடத்திலேயே என் மகள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் திண்டுக்கல் அரசு மருத்தவமனைக்கு சென்று காயம்பட்டவர்களையும், என் மகள் பிரேதத்தையும் பார்த்தேன். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் Ex. P1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் சம்பவத்தை கேள்விப்பட்டு தான் வந்தேன். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. புகாரை நத்தம் அரசு மருத்துவமனைக்கு வந்து போலீசார் எழுதிக் கொண்டார்கள். அதில் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு சொல்லவில்லை. போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் கையெழுத்துப் போட்டேன். நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காகவும், வழக்கின் எதிரி என் உறவினர் என்பதாலும், உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R KANAGARAJ

Digitally signed by R KANAGARAJ
Date: 2025.04.03 18:53:46 +0530